1978 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) புலாம்பட்டி கிராமத்திலிருந்து தொல்பொருள்கள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் போனுமாமபட்டி என்ற கிராமத்திலிருந்து பழங்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

(ஆ) விவர அறிக்கை *ஒன்று பேரவையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

ஆனைகுளம் ஊராட்சி.

*வினா 611.— திரு. யா.சை.மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல்லை மாவட்டம், வள்ளியூர் ஒன்றியத்திலுள்ள ஆனை குளம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதாவது அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

இதுபற்றிய கருத்து ஊரக வளர்ச்சி இயக்குநரால் பரிசீலிக்கப் பட்டு ஏற்கப்படவில்லை.

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, இந்த ஆனைக் குளத்தினைப் பொறுத்தவரையில் ஊரக வளர்ச்சி இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது சரியான கருத்தாகும். இருந்தபோதிலும், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சி மன்றங்களில் பல ஊராட்சிகள் பிரிக்கப்பட வேண்டி யிருக்கிறது. மேலும் பணகுடியில் இருக்கும் 14 வார்டுகளை 15 வார்டுகளாக மாற்ற வேண்டிய உத்தரவு உள்ளது. தேர்தல் வருவதற்குள்ளாக இந்த மாற்றத்தைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கேள்வி, ஆனைகுளம் ஊராட்சி பற்றியது. மற்ற ஊராட்சிகள் பற்றிய விவரங்களைத் தருவதற்கில்லை. இனிமேல் பிரிப்பதற்கு ஏது இல்லை.

---

*145-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.